முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**Provincial Department of Education - NWP**

**தரம் 10**

## மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)

# இஸ்லாம்

சுட்டெண்: ..............................

**நேரம் :- 3 மணி.**

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

### பகுதி – 1

**கவனிக்க**

- **எல்லா வினாக்ககுக்கும் விடை எழுதுக.**
  **இலக்கம் 01- 40 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1,2,3,4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் (x) இடையாளமிடுக.**
- **மிகச்சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01. தௌராத் வேதம் அருளப்பட்ட மொழி
    1. அறபு 2. ஸுர்யானி 3. யூனானி 4. ஆபரானி

02. ஸுஹுபுகளின் மொத்த எண்ணிக்கை யாது?
    1. 100 2. 110 3. 130 4. 50

03. வஹி கைறு மத்லுவ்வு எனும் பிரிவில் அடங்குவது எது?
    1. ஹதீஸ் 2. அல்குர்ஆன் 3. இஜ்மா 4. கியாஸ்

04. ஸுஜுது, ருகூஉ இல்லாத தொழுகை எது?
    1. பெருநாள் தொழுகை 2. மழைதேடித் தொழும் தொழுகை
    3. ஜனாஸாத் தொழுகை 4. பிரயாணத் தொழுகை

05. பின்வருவனவற்றுள் ஜமாஅத் தொழுகையின் மூலம் கிடைக்கும் பயன் அல்லாதது.
    1. சகோதரத்துவம் 2. சமத்துவம்
    3. தலைமைத்துவக் கட்டுப்பாடு 4. பொருள் சுத்தமடைதல்

06. தஸ்கியா எனும் பதம் குறிப்பது.
    1. பேணுதல் 2. உளப்பரிசுத்தம் 3. மீழுதல் 4. பயபக்தி

07. திட உறுதி பூண்ட றஸூல்மார்களுல் ஒருவர்.
    1. ஆதம் (அலை) 2. இத்ரீஸ் (அலை) 3. ஈஸா (அலை) 4. யூசுப் (அலை)

08. இமாரத் என்பது
    1. வணங்குதல் 2. பிரதிநிதி
    3. தூய்மைப்படுத்தல் 4. பூமியை வளப்படுத்தல் ஆகும்

09. பின்வருவனவற்றுள் வழிதவறிய சிந்தனைப் பிரிவு எது?
    1. அஸ்அரிய்யா 2. மாதுருதிய்யா 3. ஸலபிய்யா 4. முர்ஜியா

10. முதன் முதலில் அருளப்பெற்ற அல்குர்ஆன் வசனங்கள் இடம் பெற்றுள்ள அத்தியாயம்.
    1. சூரதுல் பாதிஹா 2. சூரதுன் நாஸ்
    3. சூரதுல் யாஸீன் 4. சூரதுல் அலக்

11. துணை மூலாதாரங்களுல் முதன்மையானது.
    1. இஜ்மா    2. கியாஸ்    3. ஸுன்னா    4. உர்ப்

12. தாய்ப்பாலை மாத்திரம் அருந்தும் ஆறு மாதத்திற்குட்பட்ட பெண் குழந்தையின் சிறுநீர்.
    1. இலகுவான நஜீஸ்  2. கடுமையான நஜீஸ்  3. சாதாரண நஜீஸ்  4. நஜீஸ் அல்ல

13. முதநப்பிகள் என அழைக்கப்படுவோர்.
    1. போலி நபிமார்கள்    2. நபிமார்கள்
    3. றுஸுல்மார்கள்    4. இணை வைப்போர்

14. நிரல் X இன் கீழுள்ள சொற்களுக்குப் பொருந்தும் விதத்தில் நிரல் Y இல் உள்ளவற்றை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் ஒழுங்கு வரிசை

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. நிபாக் | A. நிராகரித்தல் |
| 2. குப்ர் | B. நயவஞ்சகம் |
| 3. ரித்தத் | C. இணைவைத்தல் |
| 4. ஷிர்க் | D. மதம் மாறுதல் |

    1. BACD    2. BADC    3. BDCA    4. BCAD

15. தஸ்பீஹ் என அழைக்கப்படும் திக்ர் எது?
    1. அல்லாஹு அக்பர்    2. அல்ஹம்துலில்லாஹ்
    2. சுப்ஹானல்லாஹ்    4. லாஇலாஹ இல்லல்லாஹ்

16. இஸ்லாமிய மாதங்களுல் இறுதி மாதம்
    1. முஹர்ரம்    2. ரமழான்    3. துல்ஹஜ்    4. ஷவ்வால்

17. ஜபீரத் என்றால் என்ன?
    1. தண்ணீர் இல்லாத போது நிறைவேற்றப்படுவது
    2. காயத்திற்கு போடப்படும் கட்டு
    3. பிரயாணத்தில் தொழுகையை சுருக்குவது
    4. தொழுகையை முறிப்பது

18. உண்ணுங்கள், பருகுங்கள் எனினும் அளவுகடந்நு வீண்விரயம் செய்யாதீர்கள் என்பது.
    1. ஹதீஸ்    2. இமாமின் கூற்று
    3. உமர் (ரழி)யின் கூற்று    4. அல்குர்ஆன்

19. பின்வருவனவற்றுள் உளநோய்களுல் ஒன்று.
    1. பொறாமை    2. ஸப்ர்    3. ஷுஹ்த்    4. வுரஉ

20. சிந்துவை வெற்றி கொண்ட தளபதி
    1. தாரிக் பின் சியாத்    2. முஹம்மத் அல்பாதிஹ்
    2. முஹம்மத் பின் காசிம்    4. உமர் பின் அப்துல் அஸீஸ்

21. குடும்ப உறவின் மூலம் மஹ்ரமி ஆவோர்களில் ஒருவர்.
    1. மனைவி    2. சகோதரி    3. மகனின் மணைவி    4. மாமாவின் மகள்

22. இரும்பைப் பயன்படுத்தும் தொழில் நுட்பம் வழங்கப்பட்ட நபி
    1. ஸகரிய்யா (அலை)    2. மூஸா (அலை)
    3. தாவூத் (அலை)    4. நூஹ் (அலை)

23. ரஹ்மதுல் லில் ஆலமீன் எனும் பதம் குறிப்பது.
    1. அல்குர்ஆனை    2. அல்லாஹ்வை
    3. நபி (ஸல்) அவர்களை    4. உலக மக்களை

24. ஸஹாபாக்கள் முதன் முதலில் ஹிஜ்ரத் மேற்கொண்ட பிரதேசம்
    1. மதீனா    2. யத்ரிப்    3. பத்ர்    4. ஹபஷா

25. அர்கானுல் கியாஸில் இல்லத் என்பது
    1. உவமானம்  2. உவமேயம்  3. பொதுத்தன்மை  4. தீர்வு ஆகும்

26. இஜ்மா சுகூதி என்பது
    1. தெளிவான இஜ்மா  2. மௌன இஜ்மா
    2. பெரும்பான்மையோரது இஜ்மா  4. இணைந்த இஜ்மா

27. அல்குர்ஆனின் மிகப் பெரிய அத்தியாயம்
    1. சூரதுல் பாதிஹா  2. சூரதுல் கவ்ஸர்
    2. சூரதுல் பகரா  4. சூரதுல் ஆல இம்ரான்

28. தாருல் பனா என்பது
    1. இவ்வுலக வாழ்வு  2. மரணத்தின் பின்னால் உள்ள வாழ்வு
    2. கப்றுடைய வாழ்வு  4. தாயின் கருவரை வாழ்வு

29. இ.்.லாஸ் எனும் சொல் குறிப்பது
    1. மனத்தூய்மை  2. பற்றின்மை  3. பயபக்தி  4. பாவமீட்சி

30. நற்பண்புகள் பற்றிப் பேசும் அல்குர்ஆன் அத்தியாயம்
    1. சூரா பலக்  2. சூரா நாஸ்  3. சூரா காபிரூன்  4. சூரா புர்கான்

31. சூரா இஹ்லாஸில் உள்ள வசனங்களின் எண்ணிக்கை
    1. 3  2. 4  3. 5  4. 6

32. நஜீஸின் வகைகள்
    1. 2  2. 3  3. 4  4. 5 ஆகும்

33. ரிஸாலத் எனும் பதம் குறிப்பது
    1. நேர்வழி  2. நபித்துவம்  3. தூதுத்துவம்  4. உளத்தூய்மை

34. இல்முல் அகீதாவுக்கு அடிப்படையாக அமைபவை
    1. அல்குர்ஆனும் ஸுன்னாவும்  2. இஜ்மாவும் கியாஸும்
    2. அல்குர்ஆனும் இஜ்மாவும்  4. ஸுன்னாவும் இஜ்மாவும்

35. முஸ்லிம்களின் முதல் கிப்லா எது?
    1. க.்.பா  2. முஸ்ஜிதுன் நபவி
    3. அல் அக்ஸா  4. மஸ்ஜிதுல் ஹராம்

36. பொருளோடு தொடர்பான ஒரு வணக்கம்
    1. தொழுகை  2. திக்ர்  3. சகாத்  4. ஜிஹாத்

37. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்
    1. ஹுலுக்  2. ஸீரா  3. ஹதீஸ்  4. அதப்

38. ஹபீபுல்லாஹ் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் இறைத்தூதர்
    1. நபி (ஸல்) அவர்கள்  2. நபி மூஸா (அலை)
    3. நபி நூஹ் (அலை)  4. நபி இப்ராஹிம் (அலை)

39. பின்வருவனவற்றுள் தொழுகையின் பர்ழுகளில் அடங்காதது எது?
    1. சூரா பாதிஹா ஓதுதல்  2. ருகூஉ செய்தல்
    3. முதல் ஸலாம் கொடுத்தல்  4. நடு அத்தஹிய்யாத்தில் இருத்தல்

40. ஜின்கள் படைக்கப்பட்டிருப்பது
    1. ஒளியினால்  2. மண்ணினால்  3. நெருப்பினால்  4. இரும்பினால்

(40 புள்ளிகள்)

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 10

மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)

# இஸ்லாம்

நேரம் :- 3 மணி.

சுட்டெண்: ..............................

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களை எடுத்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

1) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.

i. ஸபூர் மற்றும் இன்ஜீல் வேதங்கள் யாருக்கு அருளப்பட்டன?
ii. பத்து ஸுஹுபுகள் வழங்கப்பட்ட இரண்டு நபிமார்களைத் தருக?
iii. தயம்மும் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பம் ஒன்று தருக?
iv. அகீதாவின் தூய்மையைப் பாதுகாக்க உழைத்த இஸ்லாமிய அறிஞர்கள் இருவரின் பெயர்களைத் தருக.
v. துணை மூலாதாரங்கள் இரண்டைத் தருக?
vi. ஆன்மீகத்தைப் பாதிக்கின்ற இரண்டு பண்புகளைத் தருக?
vii. சாதாரண நஜீஸுக்கு இரண்டு உதாரணங்கள் தருக?
viii. இஸ்பெயினை வெற்றி கொண்ட முஸ்லிம் தளபதி யார்?
ix. அஜ்னபி என்பவர் யார்?
x. அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ எனப்படுவோர் யார்?

(10x2=20 புள்ளிகள்)

2. i. தக்பீர் தஹ்ரீமா என்றால் என்ன?
ii. ஜமாஅத்தாக நிறைவேற்றப்படும் ஸுன்னத்தான தொழுகைகள் மூன்றைத் தருக?
iii. தொழுகையின் மூலம் கிடைக்கும் ஆன்மீகப் பயன்கள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

3. i. தௌபா என்ற பதத்தின் கருத்தைத் தருக?
ii. இலகுவான நஜீஸை சுத்தம் செய்யும் முறையினை விளக்குக?
iii. தௌபாவின் நிபந்தனைகளைத் தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

4. i. வஸதிய்யா என்றால் என்ன?
ii. அகீதாவில் பிளவுகள் ஏற்பட்டமைக்கான காரணிகள் மூன்று தருக?
iii. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

5. i. அன்பு வைத்தலின் இரண்டு பிரிவுகள் எவை?
ii. அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளத்தின் நிலைகள் மூன்றையும் தருக?
iii. இஸ்லாமிய பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

6. i. மஹ்ரமி என்பவர் யார்?
   ii. வியாபாரத்தின் நிபந்தனைகள் மூன்று தருக?
   iii. இபாதத்தின் நோக்கங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்புகள் எழுதுக.
   i. தஸ்கிய்யா
   ii. தக்வா
   iii. ஸுன்னாவின் முக்கியத்துவம்
   iv. உழைப்பின் முக்கியத்துவம்

(5x2=10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI



WWW.PastPapers.WIKI
Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

**Islam 10 Answers**

# வடமேல் மாகணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை- 2022
# இஸ்லாம்
# தரம் - 10
# விடைப்பத்திரம்

## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1. 4 | 11. 1 | 21. 2 | 31. 2 |
| 2. 2 | 12. 3 | 22. 3 | 32. 2 |
| 3. 1 | 13. 1 | 23. 3 | 33. 3 |
| 4. 3 | 14. 2 | 24. 4 | 34. 1 |
| 5. 4 | 15. 3 | 25. 3 | 35. 3 |
| 6. 2 | 16. 3 | 26. 2 | 36. 3 |
| 7. 3 | 17. 2 | 27. 3 | 37. 2 |
| 8. 4 | 18. 4 | 28. 1 | 38. 4 |
| 9. 4 | 19. 1 | 29. 1 | 39. 4 |
| 10. 4 | 20. 3 | 30. 4 | 40. 3 |

(40x1=40 புள்ளிகள்)

## பகுதி II

01.

I. தாவுத் (அலை) ஈஸா (அலை)

II. நபி ஆதம் (அலை), நபி மூஸா (அலை), நபி இப்ராஹிம் (அலை) போன்றோர

III. தண்ணீர் பற்றாக்குறையின் போது, தண்ணீரை பாவிக்க முடியாத போது, வுழு உறுப்புக்களில் கட்டு போடப்படுகின்ற சந்தர்ப்பத்தில்

IV. இமாம் அஹ்மத் இப்னு ஹம்மல், இமாம் அபூ மன்சூர் அல்மாதுருதி, இமாம் அபூ ஜஃபர் அத்தஹாவி, இமாம் அபூ மூஸா அல் அஸ்அரி.

V. இஜ்மா, கியாஸ், உர்பு, இஸ்திஹ்ஸான், மஸ்லஹா, கவ்லுஸ்ஸஹாபா.

VI. பொறாமை, பெருமை, பேராசை, அவதூறு, கோள் சொல்லல், புறம் பேசுதல் போன்றன.

VII. மதி, வதி, சிறுநீர், மலம், இரத்தம், மதுபானம், வாந்தி போன்றன.

VIII. தாரிக் இப்னு ஸியாத்

IX. அந்நியப் பெண்கள் / திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டோர்.

X. நபி (ஸல்) அவர்களும், ஸஹாபாக்களும் பின்பற்றிய அகீதாவைப் பின்பற்றுவோர்.

02.

I. தொழுகையின் ஆரம்ப தக்பீர்

II. கிரகணத் தொழுகை, மழை வேண்டித் தொழும் தொழுகை, இரு பெரநாள் தொழுகை, தராவீஹ் தொழுகை, ரமழான் மாத வித்ருத் தொழுகை போன்றன.

III. தக்வா, உள அமைதி, உளப்பரிசுத்தம், ஆன்மீக மேம்பாடு, நன்மைகள் கிடைத்தல், பாவங்கள் மன்னிக்கப்படல், கப்றில் வேதனைகள் நீக்கப்படல், சுவன பாக்கியம் போன்றன.

03.

I. பாவமீட்சி

II. நஜீஸைப் பிழிந்து அகற்றிய பின்னர் அந்த இடத்தில் சுத்தமான நீரை தெளித்து விடுவது.

III. தூய எண்ணம், செய்கின்ற பாவத்தை உடனடியாக விட்டுவிடுதல், செய்த பாவத்திற்காக பச்சாபதப்படுதல், அந்தப் பாவத்தின்பால் மீள்வதில்லை என உறுதி கொள்ளல், மனிதர்களுடன் சம்மந்தப்பட்ட பாவமெனில் குறிப்பிட்ட மனிதரிடம் மன்னிப்புக் கேட்டல்.

04.

I. நடுநிலை பேணல்

II. அரசியல் பிளவுகள், அந்நியச் சிந்தனைத் தாக்கம், பகுத்தறிவை அளவு கடந்து பாவித்தமை, மூடநம்பிக்கைகள், ஆராய வேண்டாம் என தடுக்கப்பட்டுள்ளவற்றை ஆராய முற்பட்டமை போன்றன.

III. உயிர் வாழும் உரிமை, சமத்துவ உரிமை, தனிமனித சுதந்திரத்துக்கான உரிமை, நிதி பெருவதற்கான உரிமை, கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கான உரிமை, மனித உரிமை, கருத்து வெளிப்பாடு உரிமை போன்றன.

05.

I. அல்லாஹ்வின் மீது அன்பு வைத்தல், படைப்பினங்கள் மீது அன்பு வைத்தல்

II. நப்ஸுல் அம்மாரா பிஸ் ஸூ., நப்ஸுல் லவ்வாமா, நப்ஸுல் முத்மஇன்னா

III. தெய்வீகத் தன்மை, சமூகத்தினுல் ஏற்படும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை சீர் செய்தல், சமூக நலனுக்கு தனி மனித நலனுக்கும் இடையே இணக்கம் காணல், ஆத்மீகத் தேவை லௌகீகத் தேவை ஆகிய இரண்டையும் சமயத்தில் கவனத்திற் கொள்ளல், எவருக்கும் அநீதி நிகழாமை, நெகிழ்வுத் தன்மை.

06.

I. திருமணம் முடிப்பதற்கு தடைசெய்யப்பட்ட உறவுகள்

II. வாங்குவோன் - விற்போன், வியாபாரப் பொருள், ஈஜாப் - கபூல்

III. உள்ளத்தைப் பக்குவப்படுத்தி இறையச்சத்தை ஏற்படுத்துதல், அல்லாஹ்வுடனான நெருக்கத்தை அதிகரிப்பது, பாவமான காரியங்களிலிருந்து தவிர்ந்து வாழப் பயிற்றுவிப்பது, தியாகம், பொறுமை, பிறர் நலன்பேணல் போன்ற நற்பண்புகளை வளர்த்தல், இறைதிருப்தியைப் பெற்று சுவனம் நுழைய வழியமைப்பது.

07.

I. தஸ்கிய்யா:- என்ற அரபுச்சொல் பரிசுத்தப்படுத்தல், சீர்படுத்தல் போன்ற கருத்துக்களைக் கொடுக்கிறது. இஸ்லாமியப் பரிபாசையில் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தல் எனும் கருத்தைக் கொடுக்கிறது. தஸ்கியா என்பதன் மூலம் ஒரு முஸ்லிம் இணைவைத்தல் உள்ளிட்ட சகல மோசமான பண்புகளில் இருந்தும் தனது உள்ளத்தையும், செயல்களையும் பாதுகாப்பதுடன் அல்லாஹ் விரும்பாத சகல செயற்பாடுகள், ஆசைகள், எண்ணங்களில் இருந்தும் உள்ளத்தைக் கட்டுப்படுத்தி அதில் நற்பண்புகளை வளர்த்து அதனைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். அல்குர்ஆன் உள்ளத்தின் நிலைகளை மூன்றாகக் குறிப்பிடுகிறது.

a. நப்ஸுல் அம்மாரா பிஸ் ஸூ. தீமையை ஏவும் உள்ளம், இங்கு நன்மைக்கான தூண்டுதல் இருக்காது.

b. நப்ஸுல் லவ்வாமா தன்னையே நொந்துகொள்ளும் உள்ளம், இங்கு இச்சைகளுக்கு எதிரான போராட்டம் இருக்கும்.

c. நப்ஸுல் முத்மஇன்னா அமைதியடைந்த உள்ளம், அது பதற்றம் தடுமாற்றமின்றி அமைதியாக இருக்கும். பொருத்தமாக எழுதப்பட்டிருப்பின் உரிய புள்ளிகளை வழங்கவும்.

II. தக்வா:- பொருத்தமாக எழுதப்பட்டிருப்பின் உரிய புள்ளிகளை வழங்கவும்.

III. இஸ்லாத்தின் அல்குர்ஆனை அடுத்து இரண்டாவது மூலாதாரமாக ஸுன்னா காணப்படுகின்றது. நபி (ஸல்) அவர்களின் வாழ்வையும், வாக்கையும் ஸுன்னா என வரைவிலக்கணப்படுத்தலாம். ஸுன்னாவை ஹதீஸ் எனவும் அழைக்கலாம். எனவேதான் அல்குர்ஆனை வஹி மத்லுவ் எனவும், ஸுன்னாவை வஹி கைரு மத்லுவ் எனவும் அழைக்கப்படுகிறது. பொருத்தமாக எழுதப்பட்டிருப்பின் உரிய புள்ளிகளை வழங்கவும்.

IV. மனிதன் தன் வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தைத் திரட்டுவதற்காக உழைப்பு இஸ்லாத்தின் பார்வையில் உயர்ந்த அம்சமாகும். தனது தேவைகளைத்தானே நிறைவேற்றிக் கொள்ளமல் பிறர் உழைப்பில் தங்கி வாழ்பவர் இஸ்லாத்தின் பார்வையில் தாழ்ந்தவராவார்.அல்லாஹ்வின் கண்ணியமான படைப்பாகிய மனிதன் பிறர் உழைப்பில் தங்கி நிற்கும் போது அவனது கண்ணியம் குறைகிறது. இதன் காரணமாகத்தான் யாசித்தலை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. பொருத்தமாக எழுதப்பட்டிருப்பின் உரிய புள்ளிகளை வழங்கவும்.

PAST PAPERS WIKI



WWW.PastPapers.WIKI

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!